## மத்திய மகாண சபை – 2020 ஆண்டு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

மத்திய மாகாண சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 திசெம்பர் 22 ஆந் திகதி வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அனைத்து மாகாண கடன் மீதிகள் தீர்வு செய்யும் கணக்கில் பெறவேண்டிய மீதி ரூபா 5,505,247 மற்றும் செலுத்தவேண்டிய வைப்புக்கள் | மாகாண சபைக்கு அறவிட வேண்டிய அரச உத்தியோகத்தர்களுக்காக முற்பணமாக வழங்கப்பட்ட கடன் நடைமுறை சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. குறித்த பணத்தை நிதியாண்டில், இம்மீதியை பணமாக அறவிடுவதற்கு அந்தந்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு | நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு அடிப்படை திட்டவட்டமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஏனைய பொறுப்புக்கள், நானாவித பொறுப்புக்கள் மற்றும் அனைத்து மாகாண கடன் மீதிகள் தீர்வு செய்யும் கணக்கில் செலுத்த வேண்டிய மீதி ரூபா 627,859,583 தொகை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | அறவிட வேண்டிய பணப் பெறுமதி ரூபா 5,505,247 ஆன வரவு மீதிகள் நடைமுறைச் சொத்துக்களாக இனங் காணப்பட்டது. நடைமுறைப் பொறுப்பான ரூபா 627,859,583 ஆன பொது வைப்புக் கணக்கு மீதிகள் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியம், விதவைகள் அநாதை ஓய்வூதிய பங்களிப்பு நிதிய கணக்கு மீதி, மாபனாவதுர வள நிலைய முற்பனக் கணக்கு, அனைத்து மாகாண இடமாற்றக் கடன் மீதிகள் கணக்குகளுடன் கூடியதாக இர்ருந்த்துடன் இக் கணக்கு மீதிகளிலிருந்து வெளித்தரப்பினருக்கு தீர்வு செய்ய வேண்டிய மீதிகளாக இருப்பதால் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் கீழ் பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டு நிதியமாக ரூபா 3,539,788 எனக் குறிப்பிட்டிருந்த போதும் அது எந்த சொத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதென நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கல்பாலம் பண்ணை முற்பணக் கணக்கின் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்வதற்கு உரிய பெறுமதி பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டு நிதியத்தின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றது. மாகாண நிதி விதி 377 இன் பிரகாரம் மாகாண திறைசரிக்கு அனுப்பிய அப்பணம் மாகாண திறைசேரியில் முறையாக கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகின்றேன். | குறித்த அனைத்துத் தகவல்களும் நிதிக்கூறுக்களின் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மத்திய மாகாண வருமானக் கணக்கிற்கு மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியை பதிவு செய்யும் போது 03 நிலுவை மீதிகள் ரூபா 33,476,864 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிதி செயலாற்றல் கூற்றில் நிலுவை வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமான தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியை பிரதி செய்யும் போது தவறுதலாக ஆண்டின் இறுதி மீதிகள் பிரதிசெய்யப்பட்டதால் மொத்தம் ரூபா 33,476,864 தொகை கூடுதலாக கூட்டப்பட்டிருந்ததாக ஏற்றுக் கொள்கிறேன். | 2021 ஆம் ஆண்டின் வருமானக் கணக்கை தயாரிக்கும் போது ஆரம்ப நிலுவை வருமான மீதியை சரியாகக் குறிப்பிட வேண்டும். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டில் இருந்து ரூபா 26,000,000 கூட்டுத்தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மத்திய மாகாண கிராம அபிவிருத்தி | பட்டியல் அமைச்சினால் செலவு செய்யப்பட்டதால் பெறுமானத்தை கணக்கீடு செய்ய முடியாதிருந்தது. | இக்கட்டிடம் நிதி நிலமைக் கூற்றில் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களம் அமைத்துள்ள கட்டிடம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மத்திய மாகாண திரட்டிய நிதி நிலைமைக் கூற்றில் நடை முறைப் பொறுப்பின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் பொதுக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த இணங்காணபடாத தொங்கள் கணக்கு மீதி ரூபா 832,955 ஆக இருந்தது. | அனைத்து மாகாண பொதுக் கணக்கில் ரூபா 1,129,703 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் இக் கணக்கு மீதியில் ரூபா 296,748 தொகை தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் பொதுக் கணக்கின் மீதி ரூபா 832,955 ஆக இருந்தது. இம்மீதிகளும் எதிர்காலத்தில் இயலுமான வரை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன் | செலுத்த வேண்டிய இடமாற்றக் கடன் மீதி மற்றும் தொங்கல் கணக்கு மீதி இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- நடைமுறையாக விடுபடல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டில் விடுபாடுகள் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகும்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 541 – சபை செயலாளர் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய 11/950/ථ/1151/4 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் கடிதம் 02 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியொன்றின் பதில் கடமை புரியும் காலம் 03 மாதங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டிய போதிலும் சபை செயலக அலவலகத்தின்<br><br>உதவிச் செயலாளர் பதவியில் கடமை புரிவதற்கு நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் 2014 மார்ச் 14 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதி வரை 06 வருடங்களை கடந்து பதில் கடமை புரிந்திருக்கையில் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னால் சபைச் செயலாளர் 2014 ஆம் ஆண்டின் போது ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் அப்பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொருத்தமான ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு நேர்முக பரீட்சையொன்று நடாத்தப்பட்டு சபை செயலக அலுவலகத்தின் பதவியணி சாசனத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதவியணி மதியுரை செயற்குழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்டதன் பின்னர் 2014 மார்ச் 14 ஆந் திகதி நடைபெற்ற பதவியணி மதியுரை செயற்குழுவின் பரிந்துரையின் பேரில் பதில் கடமை புரிவதற்கு உதவிச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். எதிர் வரும்காலங்களில் மாகாண சபை தாபிக்கப்பட்டதன் பின்னர் பதவியணியினர் மதியுரை செயற்குழுவின் பரிந்துரையின் பேரில் இது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | உதவிச் செயலாளர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் |

### 1.5.2 தலைப்பு 542 – தலைமை செயலாளர் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 22 ஆந் திகதிய மத்திய மாகாண தலைமை செயலாளரின் CPC/CS/8/1/1 ஆம் இலக்க நிதிக்கூற்று 2019 சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்திக்கு முரணாக 542-3-4-2602 ஆம் விஷேட தேவைப்பாட்டுடன் கூடிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் செலவின விடயத்திற்காக முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பொறுப்பின் அளவு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 95,947,016 ஆக இருந்த போதும் அதனை மிகைத்து ரூபா 96,609,609 ஆன பொறுப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | நிதிக்கூற்றுக்கள் மூலம் அனைத்து பொறுப்புக்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

### 1.5.3 தலைப்பு 545 – மாகாண நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டினுள் ரூபா 2,140,860,112 ஆன முத்திரக் கட்டணங்கள் மற்றும் ரூபா 130,555,222 ஆன நீதிமன்ற தண்டப்பண வருமானம் மாகாண சபையினால் சேகரிக்கப்பட்டிருந்த போதும் அதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 0.06 சதவீதமான ரூபா 1,310,102 ஆன முத்திரைக் கட்டணாங்கள் மாத்திரமாகும். அத்தோடு நீதிமன்ற தண்டப்பணம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சேகரிக்கப்பட்ட முத்திரை வருமானத்தில் மீளாய்வாண்டின் போது 52 சதவீதம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய கிடைத்திருந்த முத்திரைக் கட்டணத்தையும் நீதிமன்ற தண்டப்பணத்தையும் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மத்திய மாகாண நிதி விதி 116.1 இன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடும் போது சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் அது தொடர்பாக கவனத்து டனும் அவதானத்துடனும் இருக்க வேண்டுமெனவும் தேவையான சந்தர்ப்பங்களின் போது நிர்ணயிக்கப்பட்ட காலாப்பகுதியில் சட்டங்கள் மூலம் நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாடுகளை இடுவது தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டின் போது 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய மத்திய மாகாண வருமானக் கணக்கிலிருந்து ரூபா 6,773,747 ஆன நிலுவை வருமானம் பதிவழிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அவ்வருமான கணக்கின் பிரகாரம் 06 வருமான விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 195,023,111 ஆன நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக விஷேட ஏற்பாடுகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகின்றேன் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார திணைக்களத்திடமிருந்து மத்திய மாகாண சபைக்கு அறவிட வேண்டிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத ரூபா 171,988,242 ஆன முற்பணத் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | முற்பணங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 மத்திய மாகாண வலய பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப் பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 277,266,040 ஆன வருமானம், ரூபா 249,955,841 ஆன செலவினம் மற்றும் ரூபா 310,604,044 ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் விடயங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஓய்வுபெற்றுச் சென்றதுடன் அதற்கு பதிலாக இதுவரை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்படவில்லை. துற்போது குறித்த விடயமமற்றொருஉத்தியோகத்தரால் நிறைவேற்றப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் போது பொது பேரேட்டை சரியாக பராமரித்து பேணிச் செல்வதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிறுவகத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றம் வருமானம் மற்றும் செலவினங்களுக்குரிய பொது பேரேடொன்று பராமரிக்கப்பட வேணடும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 55,000,000 ஆன நிலையான வைப்புக்கள் முதலீட்டிற்காக மத்திய மாகாண நிதி விதி 310.2 இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி விதிகளுக்கு இணங்க நிலையான வைப்புக்கள் முதலீட்டிற்காக் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு கணக்காய்வின் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான வைப்புக்கள் முதலீட்டு பதிவேடொன்று நாளதுவரையாக பேணிச் செல்லப்பட வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 550 - பிரதம அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2015 இன் 03 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி சாசனத்தின் 111 ஆம் பகுதியின் 32 (3) ஆம் பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண முன்பிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவிற்காக ஒவ்வொரு நிதியாண்டிற்காக ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கள்களும் உள்ளடக்கப்பட்ட வருடாந்த கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் சாசனத்தின் 34 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட | முன் பிள்ளை பருவ அபிவிருத்திப் பிரிவிற்கான பதவியணியினர் கணக்காய்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பம் வரை அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. தற்போது பதவியணியொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் அப்பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாக புரம்பான கணக்கொன்று தயாரிக்கப்பட்டு மாகாண திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | 2016 ஆம் ஆண்டுடிலிருந்து வருடாந்த கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டு முதல் 05 ஆண்டுகள் கடந்திருந்த போதும் இப்பிரிவு புரம்பான கணக்கு கூற்றொன்றை தயாரித்து மாகாண திறைசேரிக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பித்திருக்கவில்லை. | | |

**1.5.6 தலைப்பு 551 – உள்ளூராட்சிமன்ற திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் மத்திய மாகாகணத்தின் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்காக 1996 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் வினியோகிக்கப்பட்டிருந்த ரூபா 3,688,891 ஆன 10 மிகை அறவீட்டுச் சான்றிதல் தொடர்பாக மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பாக கருத்திற் கொண்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பல தரப்பினரால் பகுதி பகுதியக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மிகை அறவீடு செய்யப்படல் வேண்டும் |

**1.5.7 தலைப்பு 552 – கல்வித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் 12.5.4 பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் போது வேறோரு பதவியில் பதில் கடமை புரிந்தால் மாத்திரம் பதில் கடமை கொடுப்பனவு பெற்றுக் கொள்ள முடியுமான போதும் நாவுல மற்றும் கலேவல வலய கல்வி அலுவலகங்களில் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்த வலயக் கல்விப் பணிப்பாளர் | நியமனம் தாபன விதிக்கோவை vii ஆம் அத்தியாயத்தின் 12.3 பிரிவின் கீழ் கடமை நிறைவேற்றலாக திருத்தம் செய்யுமாறு வேண்டுகோளை மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் பதில் கடமை சம்பளத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | கூடுதலாக கொடுப்பனவு செய்த சம்பளத்தை மீள அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களுக்கு அப்பதவியில் கடமை கையளிப்பு மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் வேறு பதவியொன்றில் கடமைகளை மேவுகை செய்திருக்கவில்லை. எனினும் 2016 பெப்ரவரி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை ரூபா 857,789 தொகை நாவுல கல்வி வலய கல்விப்பணிப்பாளருக்கும், 2016 ஜனவரி முதல் மீளாய்வாண்டின் ஆகஸ்ட் வரை ரூபா 828,130 தொகை கலேவல வலய கல்விப்பணிப்பாளருக்கும் மொத்தம் ரூபா 1,685,919 ஆன பதில் கடமை படிகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | மாத்தளை, கலேவல, வில்கமுவ கல்வி அலுவலகங்களுக்குரிய பாடசாலைகளில் வெற்றிடங்களாக உள்ள அதிபர் பதவிகளுக்காக முறையே 32,47 மற்றும் 27 ஆண்டுகள் வீதமான காலமாக பதில் கடமை அதிபர்கள் நியமிக்கப் பட்டிருந்ததுடன் சில பதில் கடமை புரியும் அதிபர்கள் 13 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அப்பதவியில் கடமை செய்து வந்துள்ளனர். மாத்தளை கோட்டக் கல்வி பணிப்பாளர் பதவிகள் 4 இற்கு பதில் கடமை பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் சில உத்தியோகத்தர்கள் 18 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமை புரிந்து வந்தனர். | அதிபர் தரமுள்ள ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை பாடசாலையை நடாத்திச் செல்லும் தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் கடமையை நிறைவேற்ற நியமிக்கப்பட்டுள்ளார். | வெற்றிடமாகக் காணப்படும் அதிபர் பதவிகளுக்காக நிரந்தர அதிபர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் 193 சந்தர்ப்பங்களுக்குரிய 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் ரூபா 19,375,312 ஆன, 45 சந்தர்ப்பங்களுக்குரிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,495,427 ஆன வாகன | பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து மிகை அறவீடு, சம்பளத்தில் தவணையாக மேற்கொள்ளல் மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து மிகை அறவீட்டினை மேற்கொள்ளல். சில பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விபத்துக்களால் இடம்பெற்றிருந்த நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக மாகாண நிதி விதி 55.2.1 மற்றும் 55.4 இன் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகை அறவீட்டினை அறவீடு செய்ததன் பின்னர் பதிவழிப்பதற்கு சமர்ப்பிக்கப்படும் வரை அச்சம்பவம் தொடர்ந்தும் அறவிட வேண்டிய சம்பவமொன்றாக காணப்படுவதால் மேலும் அறவிடப்படாமல் உள்ள சந்தர்ப்பங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும். | |
| (ஈ) | கண்டிக் கல்வி வலயத்தில் 35 பாடசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிபர் தரத்தை உடைய 61 அதிபர்கள் கூடுதலாக காணப்படுகையில் அவ்வலயத்தில் 28 பாடசாலைகளில் அதிபர் பதவியில் பதில் கடமை புரிவதற்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 1,11,111 ஆந் தர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அதிபர் வெற்றிடங்கள் காணப்படும் பாடசாலைகளுக்காக நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்பட வேண்டும். |

### 1.5.8 தலைப்பு - 556 மத்திய மாகாண சுற்றுலா அலுவல்கள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதி 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் கூடியது 05 ஆண்டு காலமாக ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்துள்ள ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வேறு இடங்களில் சேவை புரிவதற்கு இடமளிப்பதற்காக உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட வேண்டுமென அறிவிக்கப் பட்டிருந்த போதும் அதற்கு இனங்காத வகையில் மத்திய மாகாண சுற்றாடல் விவகார திணைக்களத்தின் 10 உத்தியோகத்தர்கள் 06 ஆண்டுகள் முதல் 21 ஆண்டுகள் வரை ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | 06 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இடமாற்றம் கட்டளை கிடைக்காத உத்தியோகத்தர் ஒருவரும் இடமாற்றம் கோராத ஒரு உத்தியோகத்தரும் இருந்தனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 557- மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் 2016 யூன் 20 ஆந் திகதி நுவரெலியா பூ வளர்ப்போர் முயற்சியாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,250,000 ஆன கடன் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நுவரெலியா பூ வளர்ப்போர் முயற்சியாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,250,000 ஆன கடன் தொகை அச்சங்கத்தின் திரவத்தன்மை சிக்கல் காரணமாக கடன் தவணை அறவீடு இடம்பெறாத போதும் அறவிடப்பட வேண்டிய வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் கடன் தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் நடுவர் தீர்ப்பிற்காக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 500,000 இற்கு மேற்பட்ட தீர்வு சிக்கல்களில் 5 ஆண்டுகள் கடந்த ரூபா 6,245,658 ஆன 3 தீர்ப்பாளர் சிக்கல்கள், 03 ஆண்டுகளைக் கடந்த ரூபா 16,487,484 ஆன 04 தீர்ப்பாளர் பிணக்குகள், 2 ஆண்டுகள் தாமதமான ரூபா 592,459 ஆன தீர்ப்பாளர் பிணக்கொன்று ரூபா 52,892,056 ஆன 17 தீர்ப்பாளர் சிக்கல்கள் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | சாசனத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் பிணக்குகளை தீர்வு செய்யும் செயற்பாடு பகுதியளவிலான நீதிமன்ற செயற்பாடாக இருப்பதாலும் வெவ்வேறு மற்றும் வைப்புக்கள் பிணக்குகள் தொடர்பாக தொடர்புபடும் கோவைகள் பாரியளவு நிதிப் பெறுமானத்தைக் கொண்டிருப்பதாலும் பிணக்குகளைத் தவிர்ப்பதற்காக நீண்டகாலம் எடுக்கப்படுகின்றது. தீர்ப்பாளர் சிக்கலகளை தீர்ப்பதற்காக உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையொன்று காணப்படுவதுடன் பிரதான கடமைக்கு முன்னுரிமை வழங்கி தீர்ப்புப் பரிசோதனை இடம்பெற்று வருகின்றது. | நீண்டகால பிணக்குகள் காலதாமதமின்றி தீர்க்கப்படல் வேண்டும் |

## 1.5.10 தலைப்பு 560 - மத்திய மாகாண சுகாதார அமைச்சு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயிற்சி பெற்ற பதவியணியினர் காணப்படாமை, அவசர சிகிச்சைப் பிரிவொன்று நிறுவப்படாமை, தேவையான மேலதிக உபகரணங்கள், மற்றும் தாதியர் பதவியணியினர் பற்றாக்குறையாக இருந்தமை போன்ற காரணங்களால் உலக வங்கி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உடுவெல, மொரகஹ, தெல்தொட்ட, தொலஸ் பாகே வைத்தியசாலை களுக்கு வழங்கப் பட்டிருந்த ரூபா 3,916,000 கூட்டுப் பெறுமதியான இருதய நோயாளர்களின் இதயத் துடிப்பை பரீட்சிக்கும் உத்தேசன செய்தல் மற்றும் மீண்டும் அதனை அதே நிலைக்குக் கொண்டு வருதல் என்பனவற்றிற்காக பயன்படுத்தும் 04 இயந்திரங்கள் (Defibrillator) 2020 திசெம்பர் வரை பயன்படுத்தாமல் காணப்பட்டன.. | அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு இணைப்பதற்காக பயிற்றப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்க்கும் செயற்பாடு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியின் பேரில் வரிசை அமைச்சினால் மேற் கொள்ளப்பட வேண்டும். | காலதாமதமின்றி இயந்திரங்களை பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் மத்திய அரசின் சுகாதார அமைச்சின் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 10,814,800 தொகை செலவு செய்து நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்காக 2019 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த உடல் உள்ளக அமைப்பினை உடனடியாக பரிசோதித்து நிழற்படத்தைப் பெற்றுக் கொள்ளும் இயந்திரத்தை (Mobile C-arm X-ray) பொருத்துவதற்கு உரஜய | நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை காரணமாக இயந்திரம் தெல்தெனிய வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது. தெல் தெனிய வைத்தியசாலையில் இவ்வியந்திரம் பயன்படுத்தாமல் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை கூடம் திருத்தப்பட்டதன் பின்னர் 2020, ஜூலை 31 ஆந் திகதி மீண்டும் நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு | தாமதமின்றி இயந்திரங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை மற்றும் இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் அனுமதிப்பத்திரம் கிடைக்கா மையால் நோயாளர்களுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதியான கணக்காய்வு திகதி வரை பயன்படுத்தாமல் காணப்பட்டது. | கையளிக்கப்பட்டது. இந்த இயந்திரத்தை செயற்படுத்து வதற்கு இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 2021 பெப்ரவரி 24 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் குறித்த இயந்திரத்தை நிறுவுவதற்கு தேவையான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக உபகாரணங்கள் வழங்கியதன் பின்னர் விரைவில் நோயாளர்களின் சேவைக்காக வழங்குவதாக தயவுடன் அறியத் தருகின்றேன். | |
| (இ) | மாகாண சுகாதாரச் சேவை பதவியணியில் 04 உழியர் மட்டங்களில் 2509 வெற்றிடங்கள் காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மாகாண சுகாதார சேவை பதவியணியில் 03 ஊழியர் மட்டங்களில் 87 ஊழியர் மிகையொன்று காணப்பட்டன. | கருத்து தெரிவிக்கவில்லை. | மிகை பதவியணியினர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.11 தலைப்பு 561 - மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தளை மாவட்ட பொது வைத்திய சாலையின் மருந்து களஞ்சியதில் ரூபா 5,641,122 ஆன காலாவதியான மருந்து இருப்புக்கள் காணப்பட்டண. | காலாவதியான மருந்து இருப்புக்கள் தொடர்பாக தொடர்ந்தும் கொழும்பு மருந்து வழங்கள் பிரிவிற்கு அறிவித்து அடுத்துவரும் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் ரூபா 25,000 இற்கு குறைவான பெறுமதியான மருந்துகளை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கைதவர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான இருப்புக்கள் கைதவிர்க்கப்படல் வேண்டும். உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக காலாவதியானதா என்பதை பரீட்சிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம் பெற்றிருந்த 5 வாகன விபத்துக்களின் ரூபா 571,824 ஆன நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக உரிய பொறுப்பானவர்களிடமிருந்து அல்லது உரிய காலத்தில் அறவிடுதலை தவிர்ப்புச் செய்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்காக மத்திய மாகாண சபை கணக்குகள் குழு வழங்கிய கட்டளை 2021 ஏப்ரல் 30ஆந் திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மத்திய மாகாண சபை கணக்குகள் குழு வழங்கிய கட்டளையை செயற்படுத்தல் வேண்டும் |
| (இ) | சுகாதார திணைக்களத்தில் 100 சந்தர்ப்பங்களுக்குரிய 1 வருடம் முதல் 18 வருடங்கள் வரையான காலப்பகுதியில் ரூபா 31,283,271 ஆன வாகன விபத்துக்களிலிருந்து இடம்பெற்ற நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக மாகாண நிதி விதி 55.2.1 மற்றும் 55.4 இன் பிரகாரம் பணத்தை அறவிடுவது அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தலோ இடம் பெற்றிருக்கவில்லை. | நீண்டகாலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் வாகன விபத்துக்கள் தீர்வு செய்வதற்குரிய கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் உரிய உத்தியோகத்தர்கள் அழைக்கப்பட்டு 2021 மார்ச் 19 ஆந் திகதி ஊழியர்கள் அறிவூட்டப்பட்டனர். | வாகன விபத்துக்களினால் ஏற்படும் சேதங்கள் நட்டங்கள் என்பவற்றை அறவிடுவதற்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 மே 9 ஆந் திகதி மத்திய மாகாண தலைமை செயலாளரால் குறித்த 14 பொறுப்பான உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைத்திருந்த கண்டி மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் சுகாதார உபகரணங்களுக்கு பூச்சுக்களைப் பூசுவதற்கு போலியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,114,905 தொகை 2021 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரையின் படி தொகை அறவிடப்பட வேண்டும். |

**1.5.12 தலைப்பு 570 - மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு**

**(அ) மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 11 மாதங்கள் முதல் 08 வருடங்கள் 09 மாதங்கள் வரையான காலப்பகுதியில் அறவிடப்படாத நிலுவையாக இருந்த 174 கடைகளுக்குரிய ரூபா 6,884,131 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | வருமானம் உரிய வேலையில் கொடுப்பனவு செய்யப்படாமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் சகல குத்தகையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலுவை வருமானத்தை உரிய நேரத்தில் அறவிடுவதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | உடன்படிக்கை பிரகாரம் நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

**(ஆ) மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பெப்ரவரி 19 கணக்காய்வு அறிக்கை திகதி வரை மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சாசனம் அங்கீகரிக்கப்படும் வரையில் 13 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் முகாமைத்துவத்தினால் அதிகாரசபையின் கூட்டங்களுக்காக சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் விதிகளை தயாரிக்காமல் இருந்ததுடன் நிர்வாக மற்றும் ஒழுக்காற்று செயற்பாட்டுக் கோவை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகின்றேன். | சாசனத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கும் வகையில் விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒப்பந்தப் பிரிவு மூலம் செயற்படுத்தப்பட்ட "டோல வீதி அக்கரமலே மூன்றாவது ஒழுங்கை மற்றும் கிங்ஸ்வூட் பாடசாலை மாவத்தை நிர்மாணத்தின் போது மதிப்பீட்டில் | 2018 ஆம் ஆணடின் போது மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பங்களிலே குறிப்பிட்ட இடத்தில் (Ashphalt) உற்பத்தி செயற்பாடுகள் நிறுத்தப்பட்மையால் அந்த இடத்தின் விலை விபரங்கள் | பரிசோதனை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடுதலாக |

| | | |
|---|---|---|
| குறிப்பிட்ட விலைக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிர்மாண வேலைகளுக்காக 35 கிலோமீட்டர் தூரத்திற்கு 929 மெட்ரிக் தொன் (Ashphalt) இற்கு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போக்குவரத்து தூரத்தின் அளவு 70 கீலோ மீற்றருக்கு கொடுப்பனவு செய்த காரணத்தினால் கூடுதலாக 35 கீலோ மீற்றருக்கு ரூபா 44.64 வீதம் போக்குவரத்து செய்யப்பட்ட 929 மெற்றிக் தொன்னிற்காக ரூபா 1,451,470 தொகை தனியார் உப ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்படவில்லை என அறியத்தருகின்றேன். மேலும் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்படுவது ஒப்பந்தக்காரரால் கேள்வி சமர்ப்பிக்கப்படும் வகைக்கு தொடர்பிலாகும். இங்கு Ashphalt wearing மற்றும் Ashphalt Binder இற்கும் கொடுப்பனவு உற்பத்திப் பொருட்களை ஏற்றுவதற்கும் மற்றும் போக்குவரத்து கட்டணங்கள் அனைத்தும் உள்ளடங்களாக வெவ்வேறாக அல்லாமல் எனவும் குறிப்பிடுகின்றேன். | கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

**1.5.13 தலைப்பு 571 - மத்திய மாகாண வீடமைப்புத் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1997 ஆம் ஆண்டு முதல் மத்திய மாகாண வீடமைப்புத் திணைக்களத்தினால் நேரடியாகவும் 1994 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை மற்றும் 1999 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட சணச கடன் சங்கத்தின் மூலமும் 1994 முதல் 1999 வரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் மத்திய மாகாண வீடமைப்பு திணைக்களம் வீடுகள் இல்லாத குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வீடமைப்பு கடன்கள் முறையே அறவிடப்பட்டிருந்த பணம் மற்றும் வட்டி ரூபா 3,588,424 மற்றும் ரூபா 1,082,548 மற்றும் ரூபா 2,165,790 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆட்களுக்கு வழங்கப்பட்ட நேரடிக் கடன் 435 பேரிடம் இருந்து கடன் ரூபா 1,993,192 மற்றும் வட்டி ரூபா 484,804 அறவிடப்பட வேண்டியிருந்தது.<br><br>கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக கடன் வழங்கல் - பயனாளிகள் 268 பேரிடமிருந்து கடன் ரூபா 1,629,832 தொகையும் வட்டி ரூபா 289,386 தொகையும் அறவிட வேண்டியுள்ளது.<br>சணச கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் கடன் வழங்களில்- 177 பயனாளிகளிடமிருந்து ரூபா 1,024,111 தொகையான கடன் மற்றும் ரூபா 261,253 தொகையான வட்டியும் அறவிட வேண்டியுள்ளது.<br>மேற்படி கடனை அறவிடுவதற்கு வெவ்வேறு நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவையான கடன் தொகை மற்றும் வட்டி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.14 தலைப்பு 580 - மத்திய மாகாண கைத்தொழில் அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண இளைஞர் விவகார, மகளிர் அலுவகள், கிராமிய அபிவிருத்தி அமைச்சு 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 45,581,286 ஆன 1760 தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்து சுயதொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்கில் மத்திய மாகாணாத்தில் மகளிருக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட தையல் இயந்திரங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அமைச்சினால் மீளாய்வாண்டின் பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த 864 நலனாலிகளில் 302 பேர் சுயதொழிலாக ஆடை தைத்தலில் ஈடுபடவில்லை என்பதால் செயற்ட்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பன்முகப்படுத்தப்பட்ட உறுப்பினர் நிதி ஏற்பாட்டின் கீழ் நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. செயற்திட்ட முன்மொழிதல் அமைச்சின் செயல்படுத்தும் திட்டத்திற்கு உள்ளடக்கப்படவில்லை. அவற்றை செயற்படுத்துவதற்கு மாத்திரம் அமைச்சிற்கு கிடைத்துள்ளது. முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்ட நலனாலிகளின் பெயர் அட்டவணை கௌரவ உறுப்பினர்களால் இணைக்கப்பட்டிருந்தது. அமைச்சினால் கருத்திற் கொள்ள வேண்டிய பிரதான தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இயலுமான வரை நடவடிக்கை எடுக்கப்படும். | சுயதொழில் செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.15 தலைப்பு 581 - மத்திய மாகாண புடவைக் கைத்தொழில் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண நிதி விதி 378.2 ஏதேனும் திட்டவட்டமான செயற்பாடொன்றிற்காக இலாபத்தை உள்ளடங்குவதற்கு வருடாந்த வருமான மதிப்பீட்டில் திட்டவட்டமான வருமான தலைப்பொன்று இல்லாத சந்தப்பங்களில் உழைக்கும் இலாபத்தை மாகாண சபையின் நானாவித வருமான தலைப்பிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய பொதிலும் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 | வர்த்தக முற்பணக் கணக்கிற்குரிய வருடாந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மாகாண திறைசேரியிடமிருந்து எவ்வித கட்டுநிதியொன்றும் வழங்கப்படாததுடன் புடவைக் கைத்தொழில் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை பயன்படுத்தி கைத்தொழிலின் ஊழியர்களின் சம்பளம் உட்பட உற்பத்திகளுக்கான செலவினம் மேற்கொள்ளப்படுகின்றது. | திட்டவட்டமான வருமான தலைப்பொன்று இல்லாமையால் உழைக்கும் இலாபத்தை மாகாண சபையின் நானாவித வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| இல் உள்ளவாறு ரூபா 16,712,066 தொகை புடவை வேலைத்தளத்தை அமைத்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பாக வர்த்த முற்பண கணக்கிற்குரிய நடைமுறை கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | ஆதலால் உழைக்கப்பட்ட பகுதியொன்று மத்திய மாகாண சபை நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படும். |

**1.5.16 தலைப்பு 584 - மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் மத்திய மாகாணத்தின் அரச மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 31 தையல் இயந்திரங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் பயன்படுத்தாமல் காணப்பட்டன. | இந்த இயந்திரங்க மிகவும் பழைமையான நிலையில் இருப்பதுடன் திருத்தம் செய்து பயன்படுத்துவது சிரமமாக உள்ளது. ஆதலால் எனது CPC/RD01/2021 /ஹ.ச/01 ஆம் இலக்க 2021.02.17 ஆந் திகதியில் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு நிலையங்களில் செயற்படாத நிலையிலுள்ள தையல் இயந்திரங்கள் தொடர்பாக தொழிநுட்ப அறிக்கையொன்று பெற்றிக் கொள்ள குழுவொன்று நியமிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக அறியத் தருகின்றேன். | பயன்படுத்தாமல் உள்ள இயந்திரங்களை திருத்தி பயன்படுத்தவோ அல்லது கைதவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.17 தலைப்பு 590 - மத்திய மாகாண விவசாய திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாணத்தில் தோட்டங்களை அண்மித்து நன்னீர் மீன் வளர்ப்பு செய்கையை மேம்படுத்தும் நோக்கில் 2017 ஆம் ஆண்டின் போது கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 4,479,184 ஆன நிதி ஏற்பாட்டின் பேரில் 13 குட்டைகள் | காணப்பட்ட நிலைமையின் பிரகாரம் இந்த 13 குட்டைகளுக்கு மீன் குஞ்சுகளை விடுவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் நலனாளிகள் வெற்றிகரமாக பராமரித்துச் செல்வதற்கு பங்களிப்பு செய்ய வேண்டுமெனவும் குறித்து அறிவித்துள்ளதாக அறியத் | செயற்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்மாணிக்கப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதியான 2020 செப்தம்பர் 25 ஆந் திகதி வரை நிலைப்படுத்தல் தவறு மற்றும் அந்த குட்டைகளுக்கு மீன் குஞ்சுகளை விடுவிக்காமை காரணமாக குறித்த செயற்திட்டம் முழுமையாக வெற்றியளிக்கவில்லை. அரசினால் செலவிடப்பட்ட செலவினம் முழுமையாக விளைவற்ற வகையில் இருந்ததுடன் நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் காணியின் உரித்தினை அரசிற்கு பொறுப்பேற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தருகின்றேன். | |

**1.5.18 தலைப்பு 591 - மத்திய மாகாண விவசாய திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை மத்திய மாகாண விவசாய திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட பழக்கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முறை முன்னேற்றத்தை பரீட்சித்த போது 16 விவசாய ஆலோசனை பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,726,100 பெறுமதியான 26,625 பழக்கன்றுகளில் மீளாய்வாண்டின் இறுதி வரை வெற்றிகரமாக 13,970 கன்றுகளே பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியில் வழங்கப்பட்ட கன்றுகளில் ரூபா 1,756,100 கூட்டுப்பெறுமதியான 12,655 ஆன கன்றுகள் அதாவது 48 சதவீதம் அழிவடைந்திருந்தன. | சிறிய மற்றும் நடுத்தர பழச் செய்கை விரிவாக்கலை அதிகரிப்பதற்காக செயற்படுத்தப்பட்ட பழவகை கிராம நிகழ்ச்சித்திட்டம் பழச் செய்கை பாரப்பினை கூட்டுதல், பழங்கள் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் பழச் செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரித்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதுடன் மத்திய மாகாண விவசாயத் திணைக்களமாக விவசாயிகளுக்கு கன்றுகளை வழங்கும் போது மிகவும் பொறுப்புடன் அது மேற்கொள்ளப்படும் எனினும் பல்வேறு காரணங்களால் கன்றுகள் அழிவடைந்திருந்ததாக அறியத் தருகின்றேன். | இது அசாதாரன சேதமாக இருப்பதால் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |